**செய்தி வெளியீடு எண்: 893** **நாள்: 12.10.2010.**

# கலை பண்பாட்டுத்துறை தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் வழங்கும் இலவச கலைப் பயிற்சி

5 முதல் 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியரின் ஆக்கபூர்வமான திறமைகளைக் கண்டுணர்ந்து அவற்றில் பயிற்சி அளித்து வெளிப்படுத்திட வாய்ப்பளிப்பதற்கு தமிழ்நாடு அரசு, கலை பண்பாட்டுத்துறையில் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தை தோற்றுவித்து செயல்படுத்தி வருகிறது. மாதந்தோறும் கட்டணம் செலுத்தி பல்வகை கலைகளை பயின்றிட இயலாத ஏழை மாணவர்களும் பயன்பெற ஏதுவாக தமிழ்நாடு அரசு கலைப் பண்பாட்டுத்துறையின் மூலம் இலவசமாக கலைப் பயிற்சிகளை அளிக்க உள்ளது.

1978 ஆம் ஆண்டு முதல் சென்னை அரசினர் தோட்டத்தில் செயல்பட்டு வந்த தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் 15.10.2010 முதல் சென்னை மயிலாப்பூர் நாகேஸ்வராவ் பூங்கா அருகில் அமைந்துள்ள முன்னாள் சென்னை மாநகராட்சி துவக்கப் பள்ளி (சிசு விஹார்) உள்ள இடத்தில் செயல்படவுள்ளது. இம்மையத்தில் பரத நாட்டியம், குரலிசை, மிருதங்கம், கீபோர்டு, சிலம்பாட்டம் ஆகிய கலைகள் திங்கள், வியாழக்கிழமைகளிலும், நாட்டுப்புற நடனம், டிரம்ஸ், நாடகம், வீணை, ஜிம்னாஸ்டிக்ஸ் ஆகிய கலைகள் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளிலும், ஓவியம், தையல், கணினி, யோகா, கராத்தே ஆகிய கலைகள் புதன், சனிக்கிழமைகளிலும் இலவசமாக பயிற்றுவிக்கப்படும். பயிற்சி நேரம் பிற்பகல் 4.00 மணி முதல் 6.00 மணி வரையாகும். ஞாயிறு வார விடுமுறையாகும்.

5 முதல் 16 வயதுக்குட்பட்ட பள்ளி செல்ல இயலாத சிறுவர் சிறுமியர் உட்பட அனைவரும் இம்மன்றத்தில் அங்கத்தினர்களாக சேர்ந்து இக்கலைகளில் இலவசமாக பயிற்சி பெறலாம். ஆண்டொன்றுக்கு அங்கத்தினர் கட்டணமாக மிக குறைந்த அளவு கட்டணமே இம்மன்றத்தில் செலுத்த வேண்டும். ஒவ்வொரு சிறுவரும் அதிக பட்சம் இரண்டு கலைகளில் பயிற்சி பெறலாம். இங்குள்ள குழந்தைகள் நூலகத்தை சிறுவர்கள் இலவசமாக பயன்படுத்தி கொள்ளலாம்.

இங்கு பயிற்சி பெறும் மாணவர்களில் திறமையானவர்கள் தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்தின் மூலம் தமிழ்நாட்டிலும் பிற மாநிலங்களிலும் நடைபெறும் திட்டங்களில் இலவசமாக பங்கு பெறலாம். மேதகு குடியரசு தலைவர் அவர்கள் தேசிய இளந்திரு விருது (National Bal Shree Award) எனும் உயரிய விருதுக்கு நடைபெறும் தெரிவுகளில் நேரடியாக கலந்து கொள்ளலாம். மேலும், மாவட்ட மாநில கலைப் போட்டிகள் மாநில அளவில் நடைபெறும் கைவினை கலைப் பயிற்சி திட்டம், கோடைக்கால மாரிக்கால முகாம்கள் போன்ற திட்டங்களில் அரசின் செலவிலேயே இலவசமாக கலந்து கொள்ளலாம். புது தில்லி தேசிய சிறுவர் மன்றத்தினர் ஒவ்வொரு ஆண்டும் புது தில்லியில் நடத்தும் அகில உலக குழந்தைகள் தின விழா, இளம் கலைஞர் சுற்று சூழல் முகாம் போன்ற திட்டங்களிலும் இலவசமாக கலந்து கொள்ளலாம். அதே போன்று மாநிலங்களுக்கிடையே நடைபெறும் கலைப் பரிமாற்ற திட்டங்கள், கராத்தே, ஜிம்னாஸ்டிக்ஸ், யோகா, சிலம்பாட்டம் போன்றவற்றில் நடைபெறும் மாவட்ட, மாநில, தேசிய அளவிலான போட்டிகளிலும் இலவசமாக கலந்து கொள்ளும் வாய்ப்பு கிடைக்கப்பெறும்.

பயிற்சி பெற விரும்பும் மாணவர்கள் தங்களது பிறந்த நாள் சான்றின் நகலுடன் தாங்கள் விரும்பும் கலைகளை விண்ணப்பத்தில் பூர்த்தி செய்து அங்கத்தினராக சேரலாம். இந்த இலவச கலைப் பயிற்சிக்கான சேர்க்கை 15.10.2010 முதல் நாகேஸ்வரராவ் பூங்கா அருகிலுள்ள தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றத்திலும், கலை பண்பாட்டுத்துறை ஆணையர் அலுவலகத்திலும் நடைபெறுகிறது. மேலும் விவரங்களுக்கு கலை பண்பாட்டுத்துறை ஆணையர் சார்பாக தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்ற செயல் அலுவலரை கலை பண்பாட்டுத்துறை ஆணையர் அலுவலகத்தில் நேரிலோ அல்லது 2461 8162 என்ற தொலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

ஆணையர்,
கலை பண்பாட்டுத்துறை.

**வெளியீடு:–இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**